## தும்பினியின் இடுப்பில் தெரியுது தமிழீழம்



சும்மா கிடந்த நாம்..
தமிழீழ விடுதலை
என்றோம்..
ஆயுதம் எடுத்து
ஆலயத்தில்
கொள்ளையடித்தோம்..!
தமிழ் மக்களின்
தலையினில்
நன்றே..
மிளகாய் அரைக்க
கற்றுக் கொண்டோம்..!
ஆட்காட்டி
வயிறு வளர்த்தோம்..!

போகும் வழி
இடையில் மறந்தோம்..
சிங்களச் சீமையில்
சீமைப் பசுக்களிடையில்
சரணடைந்தோம்..!

தாடி வளர்த்து
கம்னீசியம் காட்டினோம்
வெள்ளை ஜிப்பாவில்
ஜனநாயகம் பேசினோம்
புலி எதிர்ப்பும்
தமிழீழ அழிப்புமே
எங்கள்
அரசியலாக்கினோம்.

இன்று....
ஆக்கிரமிப்பு
படைகளோடு
தும்பினியின்
இடுப்பாட்டத்தில்
சதியோடு குதி
போடுறோம்..
தெரியுது தமிழீழம்..
சிங்களச் சீமைப்பசுவின்
சிற்றிடையில் என்று
வாக்குக் கேட்கிறோம்.

மத்தியில் கூட்டாட்சி
மாநிலத்தில் சுயாட்சி
எல்லாம் மாய மான்
விளையாட்டு..
பிரபாகரன் எனும்
பெரும் வீரன் இருந்த
பயத்தில்..
உளறித் தள்ளினோம்..!

உறுதியாய்
சொல்கிறோம்..
அன்றும் இன்றும்
என்றும்
எங்கள் வாழ்விடம்..
சிங்களப் பாசறை..!

அங்கே நாங்கள்
சுதந்திரப் பறவைகள்..!

முழங்குகின்றோம்..
சிங்களத்தி
தும்பினியின்
இடுப்பினில் தெரிவது
தமிழீழம் என்றே..!

வாருங்கள் தமிழ்
மக்களே
புலம்பெயர்ந்த பெரு
வீரர்களே..
கூடிக் கூத்தடித்து..
உணருங்கள் அவள்
இடுப்பை
காணுங்கள் தமிழீழ
சுகமதை..!

கூவி அழைக்கின்றோம்..
சிங்களத்தியோடு கூடி
உருவாக்குங்கள்
சிங்க... தமிழ் பரம்பரை
ஒன்றை..!

அப்போதே காணலாம்
சிங்களத்தீவினில்
தமிழருக்கு ஓர்
“நிரந்தர” விடுதலை..!

அதுவரை
எப்போதும்..
புலி எதிர்ப்பே
எங்கள் தாகம்..!

– குருவிகள்

## நிலவே எம்மைக் காப்பாற்று

பெருவானில் புகழோடு
உலாவரும் நிலவே
பெருந்துயரில் மாய்கிறோம்
காப்பாற்ற வாராயோ

வெள்ளியும் விண்மீனும்
உனக்கு வழித்துணை
வெறியரும் கயவரும்
எமக்குப் பெருவினை

கதிரவன் வந்ததும் உனக்கு
விடுமுறை
கடைசி மூச்சுவரை
எமக்குண்டோ விடுதலை

இருண்ட வானுக்கு நீவந்து
ஒளிதந்தாய்
இருண்ட எம்வாழ்வுக்கும்
சற்றேனும் வழிகாட்டு

பிறநாடுகளைக்
கெஞ்சினோம் புறமுதுகு
காட்டினர்
பிறைநிலவே நீயேனும்
உதவிக்கு வாராயோ

வேண்டினோம்
தெய்வங்களை வெறுமனே
இருந்தனர்
வெண்ணிலவே நீயேனும்
காப்பாற்ற வாராயோ...!
வரையில்
பொம்மைகளுடன்
விளையாடிய குழந்தைகள்
இன்று பொம்மைபோல்
உயிரற்று வீதியில்...

– சுப.நற்குணன்




நேற்று வரையில்
பொம்மைகளுடன்
விளையாடிய
குழந்தைகள்
இன்று பொம்மைபோல்
உயிரற்று வீதியில்...

விழுந்துவெடித்த
குண்டுகளுக்குத்தான்
உணர்வில்லை
வீசிச்சென்றவனுக்குமா?

வரவேற்ற தமிழகத்தின்
கரை தொட்டவுடன்
முகம் மலர்ந்தோம்.
வரவேற்ற தமிழனின்
அகம் புரிந்தவுடன்
கறை உணர்ந்தோம்.

## என் நிலை

என் உடன்
பிறந்தோரெல்லாம்
உயிர்விடும் நேரத்தில்
நான் உறங்கிக்
கொண்டிருக்கிறேன்
ஒன்று மறியாதவனாக

## ஈழம்

தங்களுடைய பதவி
நாற்காலிக்காக
தமிழகத்திலிருந்து
இந்திமொழியை
விரட்டிய கூட்டம்
மடிந்துபோகும்
தமிழினத்திற்காக
அறிக்கை மட்டும்
விட்டுக்
கொண்டிருக்கிறது!



## கடவுளிடம் கேள்வி

கல்மனம் படைத்த
கடவுளே
உன்மனைவியை
கடத்தினால் மட்டுமா
இலங்கைக்கு செல்வாய்
ஆமென்று சொன்னால்
அதையும் செய்வதற்கு
தயார்
ஆனால் உன்
மௌனத்தால்
எம் இனமல்லவா
இல்லாமல்
போய்க்
கொண்டிருக்கிறது

நீங்கள் இங்கிலாந்தில் வசிக்கும் உரிமை நிராகரிக்கப்பட்டு விட்டதா ?
திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா ?
இங்கிலாந்தில் தொடர்ந்தும் சட்டப்படி வசிக்க நீங்கள் விரும்புகிறீர்களா ?

அப்படியானால் தற்போதைய சூழ்நிலையில் சில வழிகள் உண்டு
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

AP LAW SOLICITORS LTD



Contact: 07775777188
Chrishanthi Vincent
(LLB Hons, London) Solicitor

- அரசியல் தஞ்சம் (Asylum & Appeals), மனித உரிமை விண்ணப்பம்
- குடிவரவு (Visa Extension, Entry Clearance, Citizenship, EU Residence)
- தடுப்புக்காவல் விடயங்கள் (Detention Matters)

IMMIGRATION
Student Appeal, Sponsorship
Entry Clearance Appeal,
EEC Applications, Fresh Asylum,
Human Rights Applications,Work
Permit, TIER1, TIER2 துரிதமாக
செய்து தரப்படும்

EMPLOYMENT
Redundancy
Unfair Dismissal
Breach of Contract
Sex/Race Discrimination

FAMILY MATTERS
Divorce
Children
Domestic Violence
Injuction

HOUSING MATTERS
Tenant's Problems
Council Tax
Bailiffs Issues

உத்தியோகம் சம்பந்தப்பட்ட (Employment Matters)
பிரச்சினைகள்
- உங்களை வேலையால் நீக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதா?
- உங்களின் வழமையான வேலை செய்யும் மணித்தியாலங்கள் குறைக்கப்பட்டுள்ளதா ?
- உங்களை திடீர் என்று வேலையால் நிறுத்திவிட்டார்களா ?
- உங்களின் வேலை இடத்தில் வேலை பார்க்கும் சக தொழிலாளர்கலால் பாதிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு வேலையை விட்டு விட்டீர்களா ?
- உங்கள் நிறுவனத்தை மற்றோர் நிறுவனம் வாங்கியதால் உங்கள் சலுகைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதா ?

இப்போது சமூகம் எதிர்நோக்கும் அனைத்து வேலை சம்பந்தமான பிரச்சினைகளை துரிதமாகவும், வெற்றிகரமாகவும் தீர்த்து உங்கள் முதலாளிகளிடம் இருந்து உங்களுக்கு ரொக்கமாக சேர வேண்டிய பணத்தை பெற நம் நிறுவனம் திறமையான

சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைப் பயன்படுத்தி உங்களுடைய பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான முடிவுவை எடுத்துத் தருவார்கள்

Contact: Chrishanthi Vincent
(LLB Hons, London) Solicitor
Tel: 0208 672 2617 Mobile: 07775777188
Fax: 02087678533

எங்கள் நேர்மையான நம்பிக்கையான சேவையை விரும்பிய வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பலர் இருக்கிறார்கள்.